# மஹாவைத்யநாத சிவனின் சப்தராக மாலிகை கீர்த்தனம்

ஞ.மீனாட்சி ஆ.யு.இ ஆ.ீடை.இ (ஆரளைஉ)
முனைவர்பட்ட ஆய்வாளர்,
இசைத்துறை,
தமிழ்நாடு டாக்டர்.ஜெ.ஜெயலலிதா
இசை மற்றும் நுண்கலைப் பல்கலைக்கழகம்
சென்னை, இந்தியா

**ஆய்வுச்சுருக்கம் :**

தென்னிந்திய இசையில் மிகவும் பிரபலமான உருப்படிவகை கீர்த்தனம், அத்தகைய உருப்படியின் வாயிலாக சிவதத்துவங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும் விதமாக பல வாகேயக்காரர்கள் 16ம் நூற்றாண்டு முதல் தமிழில் கீர்த்தனைகளை இயற்றி வருகின்றனர். அவர்களுள் ஒருவரான 19ம் நூற்றாண்டைச் சார்ந்த மஹாவைத்யநாத சிவனின் சப்தராக மாலிகை கீர்த்தனையினை அதன் இசையணிகள் மற்றும் அவை வெளிப்படுத்தும் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் அடிப்படையில் ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

**1. முன்னுரை :**

கி.பி. 16ம் நூற்றாண்டில் தமிழக இசை உலகில் கீர்த்தனம் பாடும் வழக்கம் புதியவரவாகத் தோன்றிற்று எனலாம். தமிழில் கீர்த்தனம் பாடும் முறையை முதன்முதலில் அறிமுகப்படுத்தியவர் முத்துத்தாண்டவர் எனக் கூறலாம்.[1] புரந்தரதாசர், அன்னமைய்யா போன்றோரால் கி.பி.14ம் நூற்றாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது இப்பிரபல உருப்படி வகை. மிகவும் எளிமையான நடை அமைப்பும், கேட்போரை ஈர்க்கும் இசை அமைப்பும் கொண்டு விளங்குவதால் தாம் கூறவந்த கருத்துக்களை மக்களிடம் கொண்டு செல்வதற்கான ஊடகமாகக் கீர்த்தனை அமைப்பை வாகேயக்காரர்கள் பயன்படுத்திக் கொண்டனர். அத்தகைய வாகேயக்காரர்கள் வரிசையில் 19ம் நூற்றாண்டில் வாழ்ந்த வையச்சேரி இராமசாமி சிவனும் அவரது இளையசகோதரர் மஹாவைத்யநாத சிவனும் தமிழிலும், வடமொழியிலும் எண்ணற்ற கீர்த்தனைகள் இயற்றியுள்ளனர்.[2] எனினும், அவர்களது பெரும்பாலான கீர்த்தனைகள் தமிழில் பாடப்பட்டுள்ளதை அறிகிறோம். மஹாவைத்யநாத சிவனின் தமிழ் இசைப்படைப்புகளில் ஒன்றான சப்தராகமாலிகைக் கீர்த்தனம்[3] பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

**2. வாழ்க்கை மற்றும் இசைப்பணி:**

கி.பி. 1844ம் ஆண்டு தஞ்சை மாவட்டம் வையச்சேரி கிராமத்தில் பஞ்சநதஐயர் என்ற துரைசாமி ஐயருக்கும், அருந்ததி என்ற தாயு அம்மாளுக்கும் மூன்றாவது குமாரராக வைத்யநாதன் பிறந்தார். ஆரம்பகாலத்தில் தந்தையிடமே இசை பயின்றார். பின்னர் ஆனை - ஐயா சகோதரர்கள், மானம்புச்சாவடி வெங்கடசுப்பைய்யர் ஆகியோரிடம் இசைபயின்றார்.[4] தமது 12வது வயதில் மேலகரம் சுப்பிரமணிய தேசிகரிடம் மஹா என்ற பட்டம் பெற்றார். சக்கரவாகம் ராகத்தை பெரியவைத்தி, சின்னவைத்தி போன்ற பெரும் இசைக்கலைஞர்களை முன்பாக பலமணிநேரம் பாடினார் என அறிகிறோம்.[5]

இவருடைய முக்கியமான படைப்பு 72 மேளராக மாலிகை ஆகும். மேலும் 128 அட்சரங்கள் கொண்ட சிம்மநந்தனதாளம், கானடா ராகத்தில் அமைந்த கௌரீநாயக என்ற தில்லானா இயற்றியுள்ளார்.[6] இவர் இயற்றிய பங்கஜாக்ஷி என்ற காம்போதி ராக வர்ணம் குறிப்பிடத்தக்கது. இசையுலகில் சங்கீதவைத்தி, சாகித்ய இராமசாமி என்ற பெயர் இவர்களுக்கு வழங்கிற்று.[7] தமையனார் சாகித்யம் இயற்ற, தம்பி இசையமைப்பார் என்பதே இதன் பொருள். இவர் தமது 49ம் வயதில் 1893ம் ஆண்டு இறையடி சேர்ந்தார்.

### 3. கீர்த்தனையின் அமைப்பு:

கீர்த்தனை என்னும் உருப்படிவகை வைதீக கானத்தைச் சேர்ந்தது. சாகித்யம் இறைவன், இறைவியைப் புகழ்வதாகவோ, மன்னிப்பு வேண்டுவதாகவோ, பக்திச்சுவையுடன் இருக்கும். புராண நிகழ்வுகள், இறை அடியார்களின் வாழ்வில் நிகழ்ந்த அற்புதங்கள், பக்தர்களின் உணர்வுகள் ஆகியவற்றைத் தெரிவிப்பதாக அமைந்துள்ளன. எனவே, கீர்த்தனையின் தாதுவைவிட (சுரப்பகுதி) மாதுவே (சாகித்யப்பகுதி) முக்கியமானது.[8] கீர்த்தனைக்குப் பொதுவாக மூன்று அங்கங்கள் காணப்படுகின்றன. பல்லவி, அனுபல்லவி, சரணம். அனுபல்லவி இல்லாத கீர்த்தனங்களும் உண்டு. பல சரணங்களுடன் காணப்படும் கீர்த்தனங்களும் உள்ளன. சில சமயங்களில் பல்லவிக்குரிய மெட்டமைப்பே சரணத்துக்கும் பயன்படுத்தப்படுகிறது. இசை இலக்கண ஞானம் இல்லாத சாதாரண இசையறிவு உடையவர்களும், கேள்விஞானத்தால் பாடும் வகையில், கீர்த்தனையின் இசையமைப்பு அமைந்திருக்கும். எளிமையான, பழக்கத்தில் உள்ள, ராகங்களில் அமைக்கப்பட்டு பலர் சேர்ந்து பாடுவதற்கு ஏற்றவகையில் இருக்கும்.

### 4. ராகமாலிகை:

பல ராகங்களால் தொகுக்கப்பட்ட மாலை என்பது இதன் பொருள். ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு ராகத்தில் அமைக்கப்பட்டிருக்கும். சப்தராகமாலிகை கீர்த்தனம் என்ற பெயரில் இக்கட்டுரையில் இடம்பெறும் கீர்த்தனைகள் குறிப்பிடப்பட்டுள்ளதால் அவை வெவ்வேறு ராகங்களில் அமைந்த கீர்த்தனைகள் கொண்ட தொகுப்பு எனப்பொருள் கொள்ளலாம்.

பொதுவாக ராகமாலிகை என்பது ஒரே உருப்படியாக பல்லவி, அனுபல்லவி, சரணம் போன்ற பகுதிகளைக் கொண்டு சிட்டைஸ்வரம், விலோமசிட்டைஸ்வரம், மகுடஸ்வரம், மகுடசாகித்யம் போன்ற அங்கங்களுள் ஏதாவது ஒன்றைப் பெற்றோ, பெறாமலோ அமைந்திருக்கும்.

சப்தராகமாலிகைக் கீர்த்தனையைப் பொறுத்தவரை ஏழு ராகங்களில் அமைக்கப்பட்ட ஏழு கீர்த்தனைகள் தனித்தனியாக உள்ளன. இறுதிக் கீர்த்தனையான ஏழாவது மோஹன ராகக்கீர்த்தனையின் அனுபல்லவியில் சப்தராகமாலிகா கீர்த்தனை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. [10]

**மஹாவைத்யநாத சிவனின் சப்தராகமாலிகை கீர்த்தனம்:** [11]

| எண் | பாடல்வரி | ராகம் | தாளம் |
|---|---|---|---|
| 1. | சரணஞ் சரண் ஐயனே | ஸ்ரீரஞ்சனி | ஆதி |
| 2. | ஏழை நான் என்செய்வேன் | சங்கராபரணம் | ஆதி |
| 3. | என்னசெய்வேன் நடேசா | நாடகுறிஞ்சி | திரிபுட |
| 4. | அன்னையே என்னை | பிலஹரி | ஆதி |
| 5. | கடைக்கண் வைத்தென்னை | பேகடா | மிஸ்ரசாபு |
| 6. | என்மனம் எப்படி | கல்யாணி | ஆதி |
| 7. | திருநடனஞ்செய்யும் | மோஹனம் | திரிபுட |

**5. சப்தராக மாலிகை கீர்த்தனங்களில் காணலாகும் இசை அணிகள்:**

முதல் கீர்த்தனம் சிவன்பேரிலும், இரண்டாவது கீர்த்தனம் முருகன் பேரிலும், மூன்றாவது கீர்த்தனம் நடராஜர் பேரிலும், நான்காவது மீனாட்சி அம்மன் பேரிலும், ஐந்தாவது கீர்த்தனம் சிதம்பரத்தலத்து இறைவி மீதும், ஆறாவது கீர்த்தனம் பஞ்சலிங்கத்தலங்களில் எழுந்தருளியுள்ள லிங்கவடிவ இறைவன் மீதும், ஏழாவது கீர்த்தனை சிதம்பர நடராஜர் மீதும் பாடப்பட்டுள்ளது.

**<u>இசை அணிகள்:</u>**

5.1 ஸ்ரீரஞ்சனிராகத்தில் அமைந்த முதல் கீர்த்தனையான **சரணஞ் சரண் ஐயனே** வில் இடம்பெறும் இசையணிகள் பின்வருமாறு:

**பல்லவியில்:**

சரணஞ் சரண } என்பதில் எதுகை,
தருணந் தருண } துவிஅக்ஷரபிராச
அனுபிராசம் ஆகியவை இடம் பெற்றுள்ளன.

**அனுபல்லவி:** யின் முதல்வரியில் - மரண, ஜனன } முரண்
2ம் வரியில் - கிரண, பரண } தொடையும்
கடைசி எழுத்துக்கள் ஒன்றிவருவதால்
அந்த்யப்ராசமும் அமைந்துள்ளது.

5.2 **ஏழை நான் என்செய்வேன்** என்ற சங்கராபரணராகத்தில் அமைந்துள்ள 2வது கீர்த்தனையில்

**பல்லவி :**

முதல்வரி - செய்வேன்
2வது வரி - உய்வேன்

**அனுபல்லவி** - முதல்வரி - பங்காளா
2ம் வரி- மணாளா

**சரணங்கள்:**

| ஐ | ஐஐ | ஐஐஐ |
|---|---|---|
| மிருளாய் | தீராய் | பொய்யா |
| மருளாய் | பாராய் | வையா |
| பொருளாய் | கூராய் | மெய்யா |

தருளாய் தாராய் கையா

என்று அந்தயப்ராசம் இடம்பெற்றுள்ளது. இவற்றைத் தமிழில் இயைபுத் தொடை என்று கூறுவர்.

5.3 **என்னசெய்வேன், நடேசா** என்ற நாடகுறிஞ்சி ராகத்தில் அமைந்த மூன்றாவது கீர்த்தனையில்

**அனுபல்லவியின்** முதல்வரி உன்னை
2வதுவரி என்னை

எதுகைத் தொடையில் அமைந்துள்ளது. முதல் சரணத்தின் முதல் இரண்டு வரிகளிலும், இரண்டாம் சரணத்தின் 4 வரிகளிலும் எதுகை காணப்படுகிறது.

| | ஐ | ஐஐ | |
|---|---|---|---|
| **சரணம்** | மாதர் | ஏ**க**மான | |
| | காதல் | லூர**கி**மொழி | |
| | | கா**து**ம்நரி | |
| | | தே**க**ம்மற | எதுகை |

5.4 நான்காவது கீர்த்தனமான பிலஹரி ராகத்திலமைந்த **அன்னையே** எனத்தொடங்கும் பாடலின் சரணத்தின் 4 வரிகளிலும் எதுகை காணப்படுகிறது.

காக்ஷி
யேக்ஷி
சர்வசாக்ஷி
அரசாக்ஷி
பேகடை எதுகை

5.5 ஐந்தாவதான **கடைக்கண் வைத்தென்னை :-**

பேகடை ராக கீர்த்தனையின் சரணத்தின் முதல் இரண்டு வரிகளில் யதி அல்லதுமோனை, இயைபுத்தொடை நயம் அமைந்துள்ளது.

| முதல்வரி | | 2வது வரி | |
|---|---|---|---|
| **க**ண்டி | யதி அல்லது | பூணேன் | |
| **க**ளித்து | மோனை | பேணேன் | இயைபுத்தொடை |
| | | நாணேன் | அல்லது |
| | | காணேன் | அந்தயப்ராசம் |

இண்டாவது சரணத்தில் **ஆதிபிராசம்** மற்றும் **த்விஅக்ஷரப்ராசம்**

| இடம்பெற்றுள்ளது | | | | |
|---|---|---|---|---|
| தஞ்ச | | சந்த | |
| சஞ்ச | | வந்த | த்வி |
| கஞ்ச | ஆதி | யுந்தி | அக்ஷரப்ராசம் |
| பஞ்ச | ப்ராசம் | ரந்த | |
| நெஞ்ச | | | |

5.6 கல்யாணி ராகத்திலமைந்த **என் மனம் எப்படி** என்ற ஆறாவது கீர்த்தனையின் பல்லவி, அனுபல்லவியில் இடம் பெற்றுள்ள ஆதிப்ராசம், த்விஅக்ஷரப்ராசம் மற்றும் அந்தயப்ராசம் பின்வருமாறு:

**பல்லவி :** **என்** மனம்
**நன்** மனம் ஆதிப்ராசம்

**அனுபல்லவி :** **உன்**னை ஆதிப்ராசம் நானென்று அந்தயப்ராசம்
**தன்**னை தானென்று

திருந் | திடுமோ
வருந் | திடுமோ
திரிந் | திடுமோ
பொருந் | திடுமோ
} த்விஅக்ஷரப்ராசம் மற்றும் அந்தயப்ராசம்

5.7 **திருநடனம் செய்யும்** என்ற மோகனராகத்திலமைந்த ஏழாவது கீர்த்தனையின் பல்லவி மற்றும் சரணங்களில் அமைந்துள்ள இசையணிகள் பின்வருமாறு :

**பல்லவி :** திரு - ஆதிபிராசம்
அனுபல்லவி பொரு -

**சரணம்-1**
சங்க
தங்கு
கங்கை
} ஆதிபிராசம்

கையுழையசைய
உழை அசைய
மதி அசைய
அசைய
இசைய
} அந்திய ப்ராசம்

**சரணம்-2:**
எல்லா வரிகளின்
**ஆரம்பம்**
தவ
உவ
சிவ
} ஆதி ப்ராசம்

**கடைசி**
முழக்க
முழக்க
முழக்க
} அந்தயப்ராசம்

சிறந்த
நிறைந்த
} ஆதிபிராசம்

**சரணம்-3:**
இரு
அரு
மரு
} ஆதி பிராசம்

நோக்கி
தேக்கி
தூக்கி
போக்கி
} அந்தயப் பிராசம்

சிறந்த
நிறைந்த
} ஆதிபிராசம்

**சப்தராகமாலிகையில் இடம்பெறும் ஸ்தல மற்றும் வாயேகாரமுத்திரை:**

| கீர்த்தனை எண் | சரணம் எண் | | வரி எண் | | ஸ்தலமுத்திரை | வாகேயக்கார முத்திரை |
|---|---|---|---|---|---|---|
| 1. | 3 | 3 | 2 | 1 | பெருந்துறை தலத்தில் | திருந்திட குஹதாசன ருந்துதி செய்திடும் |
| 2. | அனுபல்லவி | 3 | 2 | 3 | வாழ்திருவேரக வள்ளிமணவாளா | நம்பியகுகதாசன் மெய்யா |
| 3. | 3 | 3 | 4 | 3 | நேசசுயம்பிரகாச கனகசபேசா | ஆசையொழுகுகதாசன் பணிந்திடும் |
| 4. | 1 | 1 | 3 | 1 | ஷோடசாக்ஷி மதுரையரசி | காக்ஷிதந்து குகதாசன் மாக்ஷிமை மிகுந்திட |
| 5. | அனுபல்லவி | 3 | 2 | 1 | தும்பர்களுள் புகழ்வையையில் | சந்ததம் புகழ்ந்து குகதாசன் மனத்தன்புமிக |
| 6. | அனுபல்லவி | 3 | 1, 3வது வரி கடைசி 4வது வரி முதல் | | நாடும்பஞ்சன்னதி (சிதம்பரம்) | தன்னைத்தானென்று திரிந்திடுமோ குகதாசர்க்கு வரமாய்ப்பொருந் திடுமோ |
| 7. | அனுபல்லவி | 3 | 2 | 2 | அற்புதம்பரவும் சிதம்பரம் தன்னில் | அருளால் குகதாசனை ஆள்பதந்தூக்கி |

### 6. சப்தராகமாலிகை கீர்த்தனங்களில் வெளிப்படும் சைவசித்தாந்தக் கருத்துக்கள்:

1. **சரணஞ்சரண் ஐயனே** என்ற ஸ்ரீரஞ்சனி ராகத்தில் அமைந்த முதல் கீர்த்தனையில் இறைவனின் திருவடிதத்துவம், எண்குணம், சிவசக்தி தத்துவம், அர்த்தநாரீதத்துவம், ஏகனாகி நிற்றல், தன்னைச் சரணடைந்தவரை அவரவர் வினைகளுக்கேற்ப பரிபக்குவம் செய்தருளும் பேரருளுடைமை, தக்ஷிணாமூர்த்தி வடிவில் (யோகவடிவம்) ஞானாசிரியனாகி நின்றதத்துவம், ஆன்மாக்களின் வினைகளை நீக்கி, மலபரிபாகம் செய்வித்து, சத்திநிபாத நிலையை அருளி, பிறவித்துன்பத்தைக் கடக்க உதவும் தோணியாக விளங்கி, அவவற்றின் காலத்தில் வீடுபேறாகிய பேரின்பத்தை நல்குவதற்காகத் தனது திருவடி நிழலில் அபயம் அளிக்கிறான் என்னும் பொருள்படும் சித்தாந்தக் கருத்துக்கள் வெளிப்படுகின்றன.
2. **ஏழை நானௌன் செய்வேன்** என்ற சங்கராபரண ராகத்திலமைந்த இரண்டாவது கீர்த்தனையின் சரணத்தில் மாயாமலம் பற்றி குறிப்பிட்டுள்ளார். உயிர்களுக்கு மறைக்க வேண்டியதை மறைப்பதும், பிழை உணர வைத்துப் பக்குவப்படுத்துவதும் மாயா சக்தியின் செய்கை. மாயைதான் உயிர்க்கு இச்சை, ஞானம், கிரியை என்ற மூன்று சக்தியையும் எழுப்பும். அத்தகைய மாயாசக்தியால் ஏற்படும் தீய சிந்தனைகள் இல்லாமல் நல்ல சிந்தனையுடன் வாழ கருணைபுரிந்து பிறவிநோய்தீர அருள்புரிவாயாக என்று வேண்டியுள்ளார்.
3. **என்ன செய்வேன் நடேசா** என்ற நாடகுறிஞ்சி ராக மூன்றாவது கீர்த்தனையில் நடராஜ தத்துவம், அந்தகரணம், தனு, கரண, புவன, போகம், உலகநிலையாமை, ஆணவமலம், பதிஒருவனே பற்றிக்கொள்ளத்தக்கவன், வினைநாசம் செய்வதன் மூலம் பிறவித்துன்பத்திலிருந்து விடுபடலாம், இவ்வுலக பந்த பாசத்திலிருந்து விடுபட்டு இறைவனடியைப் பற்றி நிற்க அருள்புரிவாயாக என்பதன்மூலம் திருவடி தத்துவம் போன்றவற்றைக் கூறியுள்ளார்.
4. **அன்னையே என்ற** பிலஹரிராக நான்காவது கீர்த்தனையில் பதிபசு நிலையை ஆண்டான் அடிமை உறவின் மூலமும், சரணாகதி தத்துவம், தரிசிக்கமுக்தி போன்ற சிவதத்துவங்களும் கூறப்பட்டுள்ளன.
5. **கடைக்கண் வைத்தென்னை** என்ற பேகடா ராக ஐந்தாவது கீர்த்தனையில் சிவசக்தியின் தாதான்மியம் (ஒருமையில் இருமை) பேரருளுடைமை, தீயவர்களுக்கும் கருணைபுரியும் தன்மை, சிவபுண்ணியங்களாகிய வேடங்கள் (திருநீறு, ருத்திராக்கம் அணிதல்), அந்தகரணம், அன்பு நெறி, சரியை, கிரியை மார்கம், பேரின்பநிலை ஆகிய சித்தாந்தக் கருத்துக்கள் வெளிப்படுகின்றன.
6. **என்மனம் எப்படி** என்ற கல்யாணி ராகத்தில் அமைந்த ஆறாவது கீர்த்தனையில் பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருளும் கூறப்பட்டுள்ளன. பிறவித்துன்பம், ஆணவமலம், நிட்டைகூடுதல் பிரளயாகலர், மலபரிபாகம், சத்திநிபாதம், பேரின்பநிலை ஆகியவை கூறப்பட்டுள்ளது. திருவடி தத்துவம் என்பது இறைவனின் அடிகளில் சரணடைபவர்களுக்கு இறைவன் மறைத்தல், அருளல் (சத்திநிபாதம்) ஆகிய செயல்கள் மூலம் உரிய நிலையில் வீடுபோற்றினை அளித்தலைக்குறிக்கும். முக்திநிலை மூலம் பிறவித்துன்பத்தை ஒழித்து பேரின்ப நிலை எய்தலாம் என்பது சைவசித்தாந்தத்தின் முடிவு நிலையாகும். அக்கருத்துக்கள் வெளிப்படுமாறு இக்கீர்த்தனை அமைந்துள்ளது.
7. **திருநடனம்** என்ற மோஹனராக ஏழாவது கீர்த்தனையில் நடராஜ தத்துவம், நல்வினை, தீவினையாகியவினைகள் பேசப்பட்டுள்ளன. மனதாலும், வாக்காலும், உடலாலும், உயிர்களால் விரும்பிச் செய்யப்படுகின்ற இருவினைகள்தான் நல்வினை, தீவினை எனப்படும். இது ஆகாமியம் எனப்படும். அடியார்களின் கூட்டத்தால் செய்யப்படும் வழிபாடு, இறைவனுக்கு ஏற்புடைய ஒன்று. அது குரு, லிங்க, சங்கம (அடியார்) வழிபாடு எனப்படும். இறைவன் நடனம் செய்யும்போது அவரது

மேனி அழகும், அவரது சாங்கம், உபாங்கம் ஆகிய உடலில் காணப்படும் அணிகலன்கள், ஏந்தியுள்ள உடுக்கை, மான், மழு முதலியவைகள் அசையும் அழகும், அடியார்கள் புவியில் கூடி ஆடுகின்ற தலத்து இறைவனாகிய சிதம்பரநாதன் ஆடுவதைத் தரிசித்தால் தீவினைகள் பனிபோல் மறையும் என்பதையும், தரிசித்தாலே முக்தியாகிய பேரின்பநிலையை அடையலாம் என்பதும் இக்கீர்த்தனையில் காணலாகும் சித்தாந்தக் கருத்துக்கள்.

## 7. முடிவுரை:

சப்தராக மாலிகைக் கீர்த்தனம் என்ற இத்தொகுப்பிலுள்ள கீர்த்தனங்கள் ஏழிலும் வைத்யநாதசிவன் அவர்கள் இவ்வுலக வாழ்க்கையில் ஆன்மாக்களாகிய மனிதர்களுக்கு ஆணவம், மாயை, கன்மம் போன்ற மலங்களால் ஏற்படும் தீயசிந்தனைகள், உலகியல் இன்பங்களில் ஏற்படும் ஈர்ப்பு, பாவச்செயல்கள் ஆகியவற்றினால் ஏற்படும் வினைகளிலிருந்து காக்கவும் பிறவித்துன்பத்திலிருந்து விடுதலை அளிக்கவும் சித்தாந்தக் கருத்துக்களின் அடிப்படையில் வேண்டுகிறார். சப்தராகமாலிகை கீர்த்தனங்களில் கடைக்கண் வைத்தென்னை என்ற பேகடா ராகப்பாடல் மட்டும் பிரபலமடைந்துள்ளது. மற்றவற்றின் மூல மெட்டுக்கள் கிடைக்கவில்லை. ஆயினும் பழக்கமான ராகங்களில் அவை அமைக்கப்பட்டுள்ளதால் அந்தந்த ராகங்களின் சாராம்சத்தினை சாகித்ய பாவத்திற்கேற்ப பொருத்தி இசையமைத்துப்பாடலாம். எளிய இனிய இக்கீர்த்தகனைகளைப் பாடுவதன்மூலம் சைவசித்தாந்தக் கருத்துக்களை அனுபவித்து இறையருள் பெறலாம்.

## 8. ஆய்வின் மூலம்பெறப்பட்ட முடிவுகள்:

1. கீர்த்தனை என்ற இசைவடிவம் இறை அனுபவத்தை மக்களிடம் கொண்டு செல்லும் ஊடகமாக விளங்குகிறது.
2. இக்கீர்த்தனைகளில் கையாளப்பட்டுள்ள சைவசித்தாந்தக் கருத்துக்கள் - நடராஜதத்துவம், முப்பொருள் உண்மை, எண்குணங்கள், ஐந்தொழில்கள், மும்மலங்கள், நான்குவகை நெறிகள், ஞானசிரியன், மலபரிபாகம், சத்திநிபாதம், இறுதிநிலையான பேரின்பம் (முக்தி) போன்றவை.
3. சாகித்தியங்கள் இறை அனுபவத்தை வெளிப்படுத்துபவையாக இருப்பதால் இசையோடு பாடும்போது சிறந்த ஆன்மீக அனுபவத்தை வழங்கும்.

## 9. அடிக்குறிப்புகள்:

1. அருணாச்சலம்.மு, தமிழிசை இலக்கிய வரலாறு, மதுரை. 2009, பக்.260.
2. கோமதி சங்கர ஐயர், வ.சு. இசை உலகில் மஹாவைத்யநாதசிவன், சிதம்பரம், 1970, பக்.-21.
3. பாலாஜி.ஜி, மஹாவைத்யநாதசிவன் அவர்களின் வாழ்க்கை வரலாறும், இசைப்படைப்புகளும், முனைவர் பட்ட ஆய்வேடு, இசைத்துறை, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சை, 2012, பக்.78.
4. அருணாச்சலம்.மு, தமிழிசை இலக்கிய வரலாறு, மதுரை, 2009, பக்-438.
5. மீனாட்சி.சு. இசைக்கலைஞர்களின் தொண்டு (18-19ம் நூற்றாண்டு) தொகுதி ஐஐ கருத்தரங்க ஆய்வுக்கோவை 2004, அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர், பக்-368.
6. மேலது பக்.369.
7. செல்லத்துரை பி.டி. தென்னக இசையியல் ஐஏ நுனவைழைெ 2000இ திண்டுக்கல், பக்-291.
8. மேலது, பக்-67.

9. மேலது, பக்-70.

10. பாலாஜி.ஜி, மஹாவைத்யநாதசிவன் அவர்களின் வாழ்க்கை வரலாறும், இசைப்படைப்புகளும், முனைவர் பட்ட ஆய்வேடு, இசைத்துறை, தமிழ்பல்கலைக்கழகம், தஞ்சை 2012 பக்-90.

11. மேலது, பக்-78 முதல் 83.